ISSN : 2456-821X　　　　அவையம் 2 (1) 2018 P.No. : 30-36

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

=====================================================================

**புராணம் என்பதன் சொற்பொருண்மை குறித்த தேடல்**

**முனைவர் ந.சோழன்**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018**　　　　**ஏற்கப்பட்டது : 03.05.2018**

=====================================================================

*மனிதனின் ஆழ்மனதுள் பதிந்துள்ள புதைபொருள்கள் பலவாகும். அவற்றுள் காலங்காலமாகக் கையளிக்கப்பட்டு வருகின்ற கதைகள், பாடல்கள் போன்றவையும் அடங்கும். இத்தகைய மரபார்ந்த கதைகளும் பாடல்களும் தொல்பழங்கால மனித இயல்பைப் பிரதிபலிக்க வல்லன. மேற்கண்ட கதைகள், பாடல்கள் போன்றவற்றில் தெய்வச் செயல்களும் அவர்களால் நடைபெறுகின்ற அற்புதச் செயல்களும் போற்றிப் புகழப்பட்டால் அவற்றைப் புராணச் சார்புடையன என வழங்கும் வழக்கம் உள்ளது. இப்புராணம் என்ற சொல்லானது வடமொழியின்கண் வழங்கும் 'புராணா' என்ற சொல்லிருந்து வருவிக்கப்பட்ட சொல்லாகும். புராணம் என்ற சொல்லிற்குத் தமிழ் அகராதிகள் இருநிலைகளில் பொருள் தருகின்றன. பழமை, பழங்கதை எனச் சொற்பொருள் தருவது ஒருநிலை. புராணம் என்பதை, 'கதை, காந்த முதலிய புராணம். இது கலைஞானம் அறுபத்து நான்கில் ஒன்று. பழங்கதை, பூருவம், உலகத்தின் தோற்றக் கேடுகளும் பாரம்பரியங்களும், மந்வத்ந்தரங்களும் பரம்பரைக் கதைகளும் ஆகிய இவ்வைந்தனையுங் கூறலால் பஞ்சலஷணம் எனப்படுவது. புராணம்*

புதிய அவையம்

பதினெட்டு. அவை வேதங்களுக்கு வியாக்கியாநமாயுள்ளன’[1] எனக் கூறி இறுதியில், புராணங்கள் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றினும் உண்மையாய் உய்த்து நோக்குமிடத்து ஒற்றுமை உடையனவேயாம் என அப்புராணத்தின் இயல்பு இன்னதென்றும் இவையே புராணங்களென்றும் சுட்டிச் செல்வது மற்றொரு நிலை.

இனி, வாழ்வியற் களஞ்சியங்கள் புராணம் என்பதை எவ்வாறு விளக்கிச் செல்கின்றன என்பது குறித்து நோக்குவோம். ‘புராணம் என்ற சொல்லிற்கு மிகப் பழமையான வரலாறு என்பது பொருள். எது மிகப் பழைய காலத்திலிருந்து இன்று வரைக்கும் மக்களிடத்தில் பரவி வாழ்ந்து வருகிறதோ அதைப் புராணம் என்று கூறலாம் எனச் சொற்பொருள் விளக்கம் தந்து, அதன் பொருண்மைகளாக, படைப்பு, மனுவந்தரம், அரசமரபு, தலம், தீர்த்தம், விரதம், மந்திரம், யோகம், பக்தி, ஞானம், கன்மம், துதி, அருச்சனை செய்வதற்குரிய ஆயிரம் பெயர்கள் (சகசரநாமம்), தருமத்தின் தோற்றம், சிவன், விட்டுணு முதலிய தெய்வங்களின் தோற்றம் ஆகியவற்றைக் குறித்துச் செல்கின்றது’[2]. இப்பொருண்மை விளக்கமும் அகராதிகளில் தரப்பட்ட புராணம் என்பதன் விரிவுரையாகவே அமைகின்றமையினை உணரமுடிகின்றது.

நாட்டுப்புறவியல், புராணவியல் மற்றும் பழமரபுக்கதை குறித்த தரப்படுத்தப்பட்ட அகராதியானது புராணம் என்பதைக் குறித்து விரிவாகவும் ஆழமாகவும் பேசியுள்ளது. அது, ‘பிரபஞ்சப் படைப்பு மற்றும் மீவியல்பு மரபுகள் குறித்த மக்களின் சிந்தனைகளோடு அவர்களின் தெய்வங்கள், வீரர்கள், கலாச்சார அடையாளங்கள் மற்றும் சமய நம்பிக்கைகள் ஆகியவற்றினைக் குறித்த விளக்கமாகவும் முன்பொரு காலத்தில் உண்மையில் நிகழ்ந்ததாகவும் கதை வடிவில் விவரிக்கப்படுவதனைப் புராணம் என்கின்றது. மேலும் இப்புராணங்கள் மனிதன், விலங்குகள் மற்றும் இயற்கையின் தோற்றப் பின்புலத்தினைக் குறித்தும் பேசுகின்றது. தோற்றப் பின்புலத்தைப் பேசுபவை எல்லாம் புராணமாகிவிடாது. எத்தோற்றப் புராணங்களில் சமயப் பின்னணியும் அவற்றில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரங்கள் கடவுளாகவும் அமைகின்றனவோ அவையே புராணம் எனப்படும்.

அவ்வாறில்லையேல் அவை நாட்டுப்புறக் கதைகளாகக் கருதப்படும்'[3] என விளக்கிச் செல்கின்றது. இது சமயம் மற்றும் கடவுள் பின்னணியைக் கொண்டவற்றையே புராணம் என வரையறுக்கின்றது என்பது தெளிவாகின்றது.

புராணத்தினை மேல்நாட்டில் மித் *(Myth)* என அழைக்கின்றனர். புராணம் என்பதைக் குறித்து மேல்நாட்டு அறிஞர்கள் விரிவாகப் பேசியுள்ளனர். அவர்களின் புராண வரையறை குறித்த கருத்தினையும் இங்கு ஒப்பிட்டு நோக்குவோம். 'உலகமும் மனிதனும் தற்போதைய வடிவில் எப்படி வந்து சேர்ந்தனர் என்பதை விளக்குவதற்காகப் புனிதமாக எடுத்துரைக்கப்படும் ஒன்று புராணம்'[4] என ஆலன் டண்டிஸ் குறிப்பிடுகின்றார். இவர் புனிதம் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதை நோக்குமிடத்துச் சமயச் சார்புடன் எடுத்துரைக்கப்படுவதனையே புராணம் எனக் கருதியுள்ளார் என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது. 'தெய்வத்தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாம். அவர்களையும் அவர்களைப் பற்றிய இக்கதைகளையும் மக்கள் உண்மையென்று நம்புகின்றனர்'[5] என விளாடிமிர் பிராப் குறிப்பிடுகின்றார். ஆலன் டண்டிஸ் விளக்கத்தில் சமயத் தாக்கம் பெற்றது புராணம் என்பது மறைமுகமாக வெளிப்படுகின்றது. ஆனால் பிராப்போ தெய்வங்களை மையமிட்டதே புராணம் என வெளிப்படையாகவே கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

மர்சியா எலியாடி புராணம் என்பது, 'மனிதனின் தொடக்க நிலைகளைப் பற்றியும் தோற்றங்களைப் பற்றியும் கூறுவன. அவை நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பன. அவற்றில் காணும் பாத்திரங்கள் கற்பனையாக இருக்கும். புராணக் கதைகளில் காணப்படும் நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் உலகத்தில் நிகழ்கின்றன. வரலாற்று, சமூக, பண்பாட்டு முழுமையே புராணக் கதைகள்'[6] என விளக்கிச் செல்கின்றார். இவர் புராணம் என்பது மனிதர்களின் தோற்றங்களைப் பற்றியவை என்பதோடு அவை நடந்த நிகழ்ச்சிகள் என்கிறார். மாக்ஸ் முல்லரும், 'ஒவ்வொரு புராணமும் ஏதோ ஒரு உண்மையைக் கூற விழைகின்றது. அது

அடுக்கடுக்காக அமைந்த பல்வேறு செய்திகளால் மறைக்கப்பட்டு கிடக்கிறது. வேண்டாத செய்திகளையெல்லாம் அகற்றிக் கொண்டே வந்தால் வேண்டிய செய்தியாகிய உண்மை இறுதியில் கிடைத்துவிடும்'[7] என்கிறார். இவரும் புராணம் என்பது ஏதோவொரு உண்மையைக் கூற விழைகின்றது என்று கூறியுள்ளாரே தவிர அவற்றை நடந்த நிகழ்ச்சிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை உய்த்துணரமுடிகின்றது.

முற்கூறிய புராண வரையறைகள் பெரும்பாலும் அவை உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் என்பதை வலியுறுத்தவில்லை. பிராப்பும் கூட அது உண்மையென்று நம்பப்படுகிறது என்று மட்டுமே கூறியுள்ளார். மேலும் புராணம் என்பது குறித்து, 'மக்களைக் குறித்த உலகத்தினுடைய பார்வையின் ஓர் அம்சத்தை வெளிப்படுத்தவோ; ஒரு பழக்கத்தையோ நம்பிக்கையையோ அல்லது இயற்கைத் தோற்றத்தையோ விளக்கவோ கூறப்படும் உண்மையல்லாத, ஆனால் வரலாறு போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்ட மரபுவழிக் கதைகள்'[8] எனப் பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இவ்விளக்கமும் புராணத்தின் உண்மைத் தன்மையினைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றது. ஆதலால் புராணத்தினைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பு நடந்ததாக மக்களால் நம்பப்படுகின்ற ஒன்று எனக் கூறலாமே ஒழிய வரலாற்று ஆதாரங்கள் ஏதேனும் கிடைக்கும் வரை இவற்றை உண்மை நிகழ்வுகள் என்று ஏற்றுக்கொள்ள இயலாது.

இந்தியாவின் வீரநிலைக் காலம் எனும் தலைப்பில் இராமாயண, மகாபாரதங்களைத் தரவுகளாக எடுத்துக் கொண்டு ஆய்விற்கு உட்படுத்திய என்.கே. சித்தாந்தா, 'வேத மற்றும் பிராமண இலக்கியங்களில் புராண என்ற சொல்லானது தனித்து வராமல் இதிகாச - புராணா எனச் சேர்ந்தே வந்து பழங்காலக் கதைகள் எனப் பொருள் தந்துள்ளது. மேலும் அதர்வ வேதாவில் மட்டுமே புராணா என்ற சொல் தனித்துக் காணப்படுகின்றது. அதுவும் இதிகாசா என்பதற்கான மாற்றுச் சொல்லாகவே பொருள் வேறுபாடு ஏதுமின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அச்சொல்லானது தொல்பழங்கதை வழக்காறு என்பதைக் குறிக்கப்



பதிப்பு இதழியம்

பயன்பட்டுள்ளது. மகாபாரதத்தின் ஒரு பத்தியில் புராணம் என்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் கடவுள் குறித்த கதைகள் மற்றும் ஞானிகளின் ஆதிகாலப் பரம்பரை குறித்த வழக்காறுகள் எனப் பொருள் தருகின்றது என விளக்கிச் சென்றுள்ளார்'[9]. இவரின் வழி, புராணம் என்பதைக் கடவுள் மற்றும் ஞானிகள் குறித்த தொல்பழங்கதை வழக்காறுகள் எனப் பொருள் கொள்ளலாம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் புராணா என்ற வடசொல்லிற்கு ஈடாகத் தொன்மம் என்ற சொல்லைப் பயன்படுத்தும் மரபும் காணப்படுகின்றது. தொல்காப்பியர் தொன்மை என்பதற்கு, 'தொன்மை தானே உரையோடு புணர்ந்த பழமை மேற்றே ' (தொல்.செய்யுளியல்.229)என விளக்கம் தருகின்றார். இதன்வழிப் பழங்கதைகளை உரையோடு எடுத்துச் சொல்வதனைத் தொல்காப்பியர் தொன்மை எனக் கருதினார் என்பது விளங்குகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தொன்மம் என்ற சொல்லே புராணம் என்பதற்கு நிகரான சொல். அதனையே நாம் வழக்கில் கொள்ள வேண்டும் எனக் கதிர் மகாதேவன் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். ஆனால், அவரே, 'தொன்மை என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் புராணத்தைக் குறித்தது என்பது உண்மைதான். காலப்போக்கில் இச்சொல்லின் பொருள் பழமை என்று மட்டும் பொருளுணர்த்தித் தான் சுட்டிய பெயரின் தனித்தன்மையை இழந்து விட்டது'[10] எனப் புராணம் பெருவழக்காகியமைக்கான காரணம் குறித்துக் கூறியிருப்பது உண்மையைப் பிரதிபலித்து நிற்கின்றது.

வையாபுரிப்பிள்ளை புராணங்களைக் குறித்து 'புராணம் என்பதைக் குறித்துத் தமிழ் இலக்கிய அறிஞர் பலரும் பேசியுள்ளனர். புராணங்கள் என்பது தொடக்கத்தில் பதினெண் புராணங்களையே குறித்தது. அவை தொடக்கத்தில் உலகத்தின் தோற்றம், ஊழியின் இறுதி, வம்சம், மன்வந்தரங்கள், வம்சா சரிதம் என்ற ஐந்து வகைப்பட்ட செய்திகளையே குறித்தது'[11] என வடமொழியின் அடிப்படையில் விளக்கியுள்ளார். 'மனித அல்லது கடவுள் நிலை சார்ந்த ஒரு சில ஆழ்ந்த கருத்துகளைக் கூடார்த்தமாக வெளிப்படுத்திக் குறியீட்டியலாக்கும் ஒரு

கதையோ கதைக் கூறுகளின் தொகையோ புராணம் எனப்படும்'[12] எனத் தமிழண்ணல் புராணத்தின் குறியீட்டியலுக்கு அழுத்தம் கொடுத்து விளக்கம் தந்துள்ளமை புலனாகின்றது. 'புராணங்கள் உருவாக இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள அறிவுத் தொடர்பே காரணம்'[13] என அறிவுத் தொடர்பிற்கு முதன்மை தந்து தனது கருத்தினை முன்வைத்துள்ளார் சீனிச்சாமி.

புராணக் கதைகளின் உள்ளடக்கத்தினை விளக்க வந்த லூர்து, 'புராணக் கதைகள் உள்ளடக்கத்தால் பெரிதும் வேறுபடுகின்றன. எனினும் அவற்றை இணைக்கும் கொக்கியாக உலகத் தொடக்கத்தில் நிகழ்ந்த படைப்புச் சம்பவங்கள் என்ற கூறு அமைவதை எடுத்துக் காட்டியுள்ளமையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது'[14].

தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கூறை மையமிட்டுப் புராணம் குறித்த தங்கள் கருத்துகளை முன்வைத்துள்ளனர். இவர்களின் கருத்துகளுக்கு முற்கூறிய வடமொழிக் கருத்துகளோ அல்லது மேற்கத்திய அறிஞர்களின் கருத்துகளோ அடிப்படையாக அமைவதனையும் உய்த்துணர முடிகின்றது.

இதுவரை அகராதிகள், களஞ்சியங்கள் மற்றும் அறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்களின்வழிப் புராணம் குறித்த புரிதலுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. ஆனால் ஒவ்வொன்றும் தத்தம் பார்வையிலான ஒன்றிற்கோ பலவற்றினுக்கோ அழுத்தம் கொடுத்துச் செல்கின்றமையினைக் காணமுடிகின்றது. இச்சிக்கலுக்கான காரணம் ஒவ்வொருவரும் தங்கள் கலாச்சார, சமயப் பின்னணிகளில் இருந்துகொண்டு விளக்கம் கொடுப்பதாலா அல்லது புராணம் என்பதே இத்தகைய கலவைகளைக் கொண்டதுதானா என்பது குறித்தும் மேலும் ஆய்விற்கு உட்படுத்தவேண்டிய தேவையுள்ளது. இவ்விடத்தில் 'புராணம் என்பதற்கு அனைவராலும் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் ஓர் ஒற்றை விளக்கம் அல்லது வரையறை இதுவரை எவராலும் கொடுக்கப்படவில்லை'[15] என நாட்டுப்புறவியல், புராணவியல் மற்றம் பழங்கதை குறித்த தரப்படுத்தப்பட்ட அகராதி கூறுகின்றமையும் ஒப்புநோக்கத்தக்கது. எனினும் இதுவரை விவாதித்த கருத்துக்களை

உள்வாங்கிக் கொண்டு நோக்குகையில் புராணம் என்ற சொல்லானது மீவியல்புக் கூறுகளைக் கொண்டதாகவும் கடவுள் அல்லது கடவுள் அருள் பெற்றவர்களால் நிகழ்த்தப்படுகின்றவையாகவும் அமைபவற்றினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**சான்றெண் குறிப்புகள்**


*1. சந்தியா நடராசன்(ப.ஆ.), மதுரைத் தமிழ்ப் பேரகராதி-2, ப.259.*

*2. வாழ்வியற் களஞ்சியம் – தொகுதி 12, தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.753.*

*3. Maria Leach(Ed), Standard Dictionary of Folklore, Mythology and Legend,p.778.*

*4. தே.லூர்து(மேற்கோள்), நாட்டார் வழக்காறுகள் – பழமொழி, விடுகதை, கதைப்பாடல், புராணக் கதை, ப.136.*

*5. மேலது, ப.136.*

*6. சரசுவதி வேணுகோபால்(மேற்கோள்), நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், ப.21.*

*7. மேலது, ப.22.*

*8. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்-தொகுதி-2, ப.1060.*

*9. N.K.Sidhanta, The Heroic Age of India,p.29.*

*10.கதிர்.மகாதேவன், தொன்மம், ப.1.*

*11.எஸ்.வையாபுரிப்பிள்ளை,தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், ப.214.*

*12.தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், ப.183.*

*13.து.சீனிச்சாமி, தமிழில் காப்பியக் கொள்கை – முதற்பகுதி, ப.13.*

*14.தே.லூர்து(மேற்கோள்), நாட்டார் வழக்காறுகள் – பழமொழி, விடுகதை, கதைப்பாடல், புராணக் கதை, பக்.140-141.*

*15.Maria Leach(Ed), Standard Dictionary of Folklore, Mythology and Legend,p.778.*